அவர்களையும் வணங்கி, விதி 110—ன்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கிவரும் விலையில்லா வீட்டுமனை, விலையில்லா தையல் இயந்திரம், விலையில்லா சலவைப் பெட்டி ஆகிய திட்டங்களுக்காக பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.72,000/— ஆக உயர்த்தியும், கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் பயன்பெறும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.72,000/—ஆக உயர்த்தியும், இரண்டு புத்தாக்க அறிவிப்பினை புதுப்பொலிவாய் அறிவித்த புன்னகைத் தாய் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றி சொல்லி கைகூப்பி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12—40

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*